★ விலை ரூபா 1-00

# ஈழநாடு

THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 சித்திரை 31 றஜப் 30 இதழ் 92

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 14—5—83

PUBLIC LIBRARY JAFFNA

வல்வை நகரசபை

## கூட்டணி வேட்பாளர் 12 பேரும் கூட்டாக வாபஸ்!

(புலோலி)

வல்வெட்டித்துறை நகரசபைத் தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர்கள் 12 பேரும் வாபஸ்பெற்றுக்கொண்டுள்ளனர்

வல்வெட்டித்துறை நகரசபைத் தேர்தலுக்கான தமிழர் விடுதலைக்கூட்டணி வேட்பாளர் பட்டியலில் முதலாம் இடம் வகிப்பவரும் முற்போ நகரசபையின் தலைவருமான திரு ஞானமூர்த்தி இது தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ள தாவது:

"இளைஞர்கள் சிலர் நேரில் வந்து சந்தித்து தமிழ்க்காங்கிரஸ் கட்சியினர் தேர்தலில் இருந்து விலகிக்கொண்டது போல நீங்களும் விலகிக்கொண்டு தமிழ்மக்களின் ஒற்றுமையை நிலைநிறுத்த சந்தர்ப்பம் தாருங்கள் என்று கேட்டுக்கொண்டனர். இதன் காரணமாகவே வேட்பாளர்கள் அனைவரையும் கூட்டி ஆலோசித்து வாபஸ்பெறுவதென முடிவுஎடுக்கப்பட்டது தனித்தனியே தேர்தல் ஆணையாளருக்கு எழுதுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது

"தமிழர்விடுதலைக்கூட்டணி செயற்குழு எந்த முடிவு எடுத்தாலும் இந்த முடிவு எமது தனிப்பட்ட முடிவாகும். எனினும் த. வி. கூட்டணியின் கொள்கையிலிருந்து நாம் சற்றேனும் விலகவில்லை."

### தீக்கிரை

(புலோலி)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் தற்காலிகமாக

(8-ம் பக்கம் பார்க்க)

# "ஐ.தே.க. எல்லாஇடங்களிலும் போட்டியிடும்!

## அரசுஆதரவுடன் அபிவிருத்தி திட்டம் அமுல்செய்வோம்"

### பத்திரிகையாளர் மாநாட்டில் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

"யாழ்ப்பாணம் மாநகரசபை நிர்வாகத்தை நல்லமுறையில் நடத்தவேண்டும் என்ற காரணத்திற்காகவே நாங்கள் போட்டியிடுகின்றோம் எக்காரணம் கொண்டும் வாபஸ்பெறமாட்டோம். எங்கள் கட்சியின் தலைமைப்பீடத்தின் முடிவின்படி போட்டியிட்டேதீருவோம்."

யாழ் மாநகரசபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி நான்காவது வேட்பாளரான முன்னாள் யாழ். மாநகர சபை உறுப்பினரும், முன்னாள் புலோலி கிராம சபைத் தலைவருமான திரு. ஏ. ஜி. இராஜசூரியர் நேற்று பிற்பகல் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் மேற்கண்டவாறு தெரிவித்தார்

திரு. ராஜசூரியர் இலங்கையில் நடந்த அமைச்சர் மாநாட்டில் வடக்கிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடும் ஐ. தே. க. வேட்பாளர்களும் கலந்துகொண்டனர். திரு. இராஜசூரியர் மேலும் கூறியதாவது:

"குருநகர், பாஷையூர், நாவாந்துறை, கொட்டடிப் பகுதிகளில், ஐக்கிய தேசியக் கட்சி அரசினால் ஆரம்பிக்கப் பட்டவீடமைப்புத்திட்டங்கள் பூர்த்தியாகிவிட்டது. வீடு வசதியற்ற ஏழைமக்களுக்கே இவ்வீடுகளை வழங்குவோம்.

"மத்திய அரசின் உதவி

(8-ம் பக்கம் பார்க்க)

## "பல்கலைக்கழக மாணவர் உடன் திரும்பவேண்டும்"

### பேராசிரியர் கல்பகே கூறுகிறார்

(கொழும்பு)

பேராதனைப் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறிய தமிழ் மாணவர்கள் உடனடியாகத் திரும்ப வேண்டுமென்றும் மாணவர்களிடையே ஏற்பட்டபிரச்சினை பெரும் பிரச்சினையல்ல என்றும் பல்கலைக்கழக மானியக் குழுத்தலைவர் பேராசிரியர் கல்பகே நேற்றுக் கூட்டிய பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.

இப்போது பரீட்சைக்கான மாணவர்கள் பல்கலைக்கழகத்தை மூடமுடியாது என்றும் அவர் கூறினார்.

பாலசூரியன் என்ற மாணவருக்கு தடை செய்யப்பட்ட இயக்கத்தின் ஸ்டிக்கர் ஸ்டாம்பும் துண்டுப்பிரசுரங்களும் பார்சலில் வந்ததால் அவர் கைது செய்யப்பட்டார். என்று பேராசிரியர் கல்பகே மேலும் தெரிவித்தார். (இ)

சாவகச்சேரி நகரசபை

## கூட்டணி முதல் வேட்பாளர் வாபஸ்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நகராட்சி மன்றத் தேர்தல் வேட்பாளர் பட்டியலில் தமிழர் விடுதலைக் கூட்டணி முதல் வேட்பாளரான திரு. சி. கி. மயில்வாகனம் தாம் போட்டியிலிருந்து விலகிக்கொள்வதாக யாழ். உதவி தேர்தல் ஆணையாளருக்கும், கூட்டணி செயலாளர் நாயகத்துக்கும் விலகல் கடிதங்கள் அனுப்பிவைத்துள்ளார்.

இதுசம்பந்தமாக திரு. மயில்வாகனம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

13 – 5 – 83 –ம் திகதியில் வெளிவிட்ட பத்திரிகை அறிக்கையில் கட்சியின் செயலாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளபடியும் நான் தங்களை 12 – 5 – 83 திகதியில் சந்தித்த போது வேட்பாளர்களுக்கு தனிப்பட்ட முறையில் எந்தவிதமான பாதுகாப்பும் கொடுக்க முடியாத நிலையிலிருப்பதையும் ஒவ்வொரு வேட்பாளரும் தனிப்பட்ட முறையில் சூழ்நிலைக்கு ஏற்றவாறு நடந்துகொள்ளலாம் என்ற செயலாளர் நாயகத்தின் கருத்துக்கமைய நான் எனக்கு ஏற்பட்டுள்ள சூழ்நிலை காரணமாக சாவகச்சேரி நகரசபை வேட்பாளர் பட்டியலிலிருந்து விலகிக்கொள்ளுகின்றேன். (மா)

பேராதனைப் பல்கலைக்கழகம்:

## பாதிக்கப்பட்ட மாணவர்கள் இன்று யாழ். பல்கலைக்கழகத்தில் கூடுகின்றனர்

(யாழ்ப்பாணம்)

பேராதனைப் பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறிய தமிழ்மாணவ மாணவிகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் யாழ். பல்கலைக்கழகத்தில் கூடி தங்கள் நிலைமைகள் குறித்து ஆலோசனை நடத்தவுள்ளனர்.

இக்கூட்டத்தில் பேராதனைப்பல்கலைக்க மாணவர்கள் எல்லோரையும் சமூகமளிக்குமாறு வேண்டுகோள் விடுக்கப் பட்டுள்ளது

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சுமார் 1500 தமிழ் மாணவர்கள் உயர்கல்வி படிக்கிறார்கள்

கடந்த புதன்கிழமை இரவு பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஏற்பட்ட அசம்பாவித சம்பவங்களைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட தமிழ் மாணவர்கள் பீதியடைந்து பல்கலைக் கழகத்தைவிட்டு வெளியேறிவிட்டனர்.

வெளியேறிய மாணவர்கள் தங்களின் எதிர்கால நிலைமை குறித்தும் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் இன்று யாழ். பல்கலைக்கழகத்தில் ஆலோசிக்கவுள்ளனர். (மா)

## ராஜசுந்தரத்தை மனைவி சந்தித்தார்

(கொழும்பு)

பனாகொடை இராணுவ முகாமில் காவலில் வைக்கப் பட்டுள்ள வவனியா காந்தீய இயக்க அமைப்பாளர் டாக்டர் ராஜசுந்தரத்தை அவரது மனைவி திருமதி ராஜசுந்தரம் நேற்று சந்தித்துப்பேசினார் (இ)

ACCOUNTANCY

EPSILON'S
**Intensive Courses**
For
**I. C. M. A.** Foundation Stage Sections A & B
**Chartered Prelim** (English)
NOVEMBER 1983 EXAMS
Conducted during weekends by
Qualified & Experienced
CHARTERED ACCOUNTANTS AND COST
& MANAGEMENT ACCOUNTANTS
Please Contact:
**EPSILON LIMITED**
656, POINT PEDRO ROAD,
NALLUR — JAFFNA
(Opposite Kanthasamy Temple
& close to Chetey Street Junction)
(Limited Accomodation)
EPSILON (7159)

கனடா, பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மனி, சிங்கப்பூர்
ஆகிய இடங்களுக்கு துரிதமாகச் செல்வதற்கான
சகல பிரயாண ஒழுங்குகளுக்கும் - இலவச ஆலோசனைகளுக்கும்
**AIR - TRANSIT** (TRAVEL CONSULTANTS)
99 — 2/56B, 2-nd Floor, Gaffoor Building, Colombo-1, Phone: 549365
(7173)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

எழுதுமட்டுவாளில் 25 ஏக்கர் தென்னந்தோட்டம், வீடு, நல்லதண்ணீர்கிணறு, மாமரம், கல்கொட்டைமரம் என்பவற்றுடன் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு 126 2ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். 7203

பலாலி றோட் 2ம் ஒழுங்கையில் 2 பரப்பு காணி வீட்டுடன் விற்பனைக்கு இருக்கிறது. தொடர்பு; K. கந்தசாமி 44/2 கொலிச் றோட், நீராவியடி யாழ்ப்பாணம். 7199

சொந்தப்பாவிப்பில் உள்ள சோமசெற் கார் உடன் விற்பனைக்குண்டு RG 32, பிறவுன் வீதி. யாழ்ப்பாணம். 7197

நல்ல நிலையிலுள்ள 34ஸ்ரீ மிற்சுபிஷி டெலிகா VAN விற்பனைக்குண்டு. தொடர்பு: துரைராஜா, 86, கண்டிவீதி, [கச்சேரிக்கு அண்மையில்] யாழ்ப்பாணம். 7232

நல்ல நிலைமையுள்ள, பதிவுசெய்யப்படாத வொக்ஸ் வகன் (V. W) டெலிவரி வான்-பெற்றோல் -1978மொடல்-1600C.C என்ஜின் - 1 TON வான் விற்பனைக்குண்டு தொடர்பு: சு. திரு. 103, கொழும்புத்துறை றோட், கொழும்புத்துறை. 7231

ஐந்து ஏக்கர் காணி வீடு, கிணறு தென்னை, மா, கசு மரங்களுடன், மிருசுவிலில் விற்பனைக்குண்டு. தொடர்பு: அன்னப்பா மாஸ்ரர் வேம்படி றோட், மானிப்பாய். 7221

1 DEEP FREEZER 1 ஐஸ் கிறீம் மெஷின். தொடர்பு கொள்க: விஜேபா இலக்கம் 42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 7229

இறைச்சிக் கோழிக் குஞ்சு (Broilers) (ஒரு நாள் முதல் 2 மாதம் வரை)களும், இறைச்சித்தேவைக்கும் மற்றும் முட்டை போடும் கோழிகளும் விற்பனைக்குமுண்டு. விபரம்: இ. தர்குணராஜன் நீர்வேலி தெற்கு, நீர்வேலி. (நீர்வேலி கந்தசாமி கோவிலடி) 7205

யாழ் சுண்டிக்குளி 11/1, செல்வநாயகம் ஒழுங்கையில், நல்ல கட்டிடத்துடன் 3பரப்பு 10குழி காணி விற்பனைக்குண்டு. கச்சேரி, பாடசாலைகள் அண்மையிலுண்டு. தொடர்பு: சபாரட்ணம், 40, றக்கா ஒழுங்கை, சுண்டிக்குளி, 7144

## தேவை

புடவை வியாபாரத்தில் அனுபவம் மிக்க ஆண்விற்பனையாளர்கள் தேவை. விபரங்களுக்கு நேரில் வரவும். சிமாட்டி ரெக்ஸ்ரைல் இல; 122 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 7190

யாழ். கே. கே. எஸ். வீதியில் சகல வசதிகளுடனும் கூடிய கடையில் றெக்கோடிங் பார் போடக்கூடியவர்கள் தேவை. தொடர்பு: மகரி சேவிஸஸ் த டன்லப் ஸ்ரோஸ், 234 (446), ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 7202

## தேவை

காரியாலய பியோன் வேலைக்கு 20வயதிற்குட்பட்டவர்கள் தேவை. அலுவலக நேரத்தில் திங்கள், செவ்வாய் நாட்களில் நேரில் வரவும் TAX AND ACCOUNTING SERVICES 37, பிரப்பங்குளவேலை, யாழ்ப்பாணம். 7242

தொலைபேசி சுத்தப்படுத்தும் சேவைக்குப் பெண் ஊழியர் தேவை. விண்ணப்பிக்கவேண்டிய முகவரி; விளம்பர இல 7243 மே/பா ஈழநாடு யாழ்ப்பாணம். 7243

ஆங்கிலத்திலும் தமிழிலும் நன்கு வேலைதெரிந்த ஆண் பெண் அச்சுக்கோப்பாளரும், அன்னியக்க றூலிங் மெஷின் வேலை தெரிந்தவரும் உடன் தேவை. சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும். பஸ்ரியன் அச்சகம், பிரதானவீதி, யாழ்ப்பாணம். 7206

## வகுப்புகள்

'TOEFL', 'ELTS' வகுப்புகள் நடைபெறுகின்றன ENGLISH A/L வகுப்புகள் SPOKEN ENGLISH CONTACT பிலிட்பையா யோகரத்தினம், 253, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 7244

16-5-83தொடக்கம் தையல் வகுப்புகள் ஆரம்பமாகும். விபரங்கட்கு தொடர்புகொள்ளவும் THE SCHOOL OF DRESS MAKING, 63 பருத்தித்துறைவீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 7188

## பயிற்சி

யாழ் நகரிலுள்ள ஒரு பிரபல நிறுவனத்தில் "Business Management" பயிற்சி வகுப்பு ஆரம்பமாகவுள்ளது. பயிற்சிக் காலம் மூன்று மாதம். பயிற்சிக்கட்டணம் ரூபா 500/- மட்டும் விபரங்களுக்கு 18-5-83 முன்பாக விண்ணப்பிக்கவும். விளம்பர இல; 7216 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 7216

றெவிஜிரேசன் றிப்பியறிங், ஏயர் கொண்டிசனிங் Pipe Fitting, வயறிங், Hotel Management பயிற்சி ஆரம்பம்: 20-05-83 விபரத்திற்கு The School of Computer Studies 52/1 வைரத்தினம் கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 7222

## வாடகைக்கு

K. K. S, றோட்டில் கன்னாதிட்டிக்கருகில் 1000சதுர அடி விஸ்தீரணமுள்ள கடை வாடகைக்கு உண்டு. காலை8 மாலை 6மணிவரை நேரில் தொடர்பு கொள்ளவும். 67, சிவன் கோவில் வடக்கு வீதி, யாழ்ப்பாணம். 7239

## வைத்தியம்

மனநோய், வலி, சர்மவியாதிகள் எவ்வளவு நாட்பட்டதாயினும் பார்த்து உத்தரவாதத்துடன் சிகிச்சையளிக்கப்படும். Dr V T CHANTHIRAN, 218/5PALALY ROAD, KANDARMADAM, JAFFNA 7225

## பொன்னாலை மண்டலபூசை

[சுழிபுரம்]

பொன்னாலை ஸ்ரீவரதராசப் பெருமான் ஆலயத்தில் தொடர்ந்து நடைபெற்று வரும் மகாலட்சுமி மண்டல பூசை பூர்த்தி வரும் புதன் கிழமை நடைபெறவுள்ளது மண்டலபூசை பூர்த்தியை ஸ்ரீ சுப்பிரமணியக்குருக்கள் நிறைவுசெய்துவைப்பார் இப்பூசை தினமும் மாலையில் சென்ற சித்திரைமுதல் நடைபெற்றுவருகின்றது (அ)

## சனசமூகநிலைய நன்கொடைப் பணம்

(புலோலி)

"யாழ் மாவட்டத்திலுள்ள பதிவுசெய்யப்பட்ட சனசமூக நிலையங்கள் 1982ம் ஆண்டுக்குரிய அரசினர் நன்கொடைப் பணம் இதுவரையிலும்கிடைக்காதுவிடின் சித்தப் பகுதி யாழ். மாவட்ட அபிவிருத்தி சபை உபஅலுவலகங்களுடன் தொடர்புகொள்ளவேண்டும்"

இவ்வாறு யாழ் மாவட்ட சனசமூகநிலையங்களின் ஒன்றியப் பொதுச்செயலாளர் திரு வரதராசா சகல சனசமூகநிலையங்களின் செயற்குழுக்களுக்கும் அறிவித்துள்ளார்.

கடந்த வருடத்திற்கான இந்த நன்கொடைப்பணத்தைப் பெறுவதில் சிரமங்கள், தாமதங்கள் ஏற்படின் தன்னுடன் தொடர்புகொள்ளுமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

மரணசாதனமின்றி இறந்துபோன யாழ்ப்பாணம் குருநகர் பால உடையார் வீதி 54ம் இலக்கம் அந்தோனிப்பிள்ளை செபஸ்தியாம்பிள்ளை அல்லது செல்லநாயகம் என்பவரின் மரணசாதனமற்ற மரணச் சொத்துக்கள் சம்பந்தமான விடயத்தில்

மரணமெய்தியவர் அந்தோனிப்பிள்ளை மகள் எட்வீனம்மா இல. 54 பால உடையார் வீதி குருநகர் யாழ்ப்பாணம்.

மனுதார்

மரணச்சொத்து)

இல. 3711

நியாயாதிக்கம்)

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணச்சொத்து நியாயாதிக்க வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள மரணமெய்தியவரின் மரணசாதனமற்ற மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1983ம் ஆண்டு வைகாசி மாதம் 25ந் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோற்றி அவ்வாறு பதியப்பட்டுள்ள பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுன கட்டளை ஆக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்கள்

1983ம்ஆண்டு மார்ச் மாதம் 31ந் திகதி

நீதிமன்றக்கட்டளைப்படி
தா. குலஞானம்
பதிவாளர்

தயாரித்தது
இ. மரியாம்பிள்ளை
மனுதாரரின் சட்டத்தரணி
7212

## திருமண அழைப்பு

இடம்: தொல்புரம் பூதராசி அம்மன் சந்நிதி

காலம்: 15-5-83-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் 10மணி வரை

மணமகன்: சிவசிதம்பரக்குருக்கள்

மணமகள்: பிரகந்நாயகி

தங்கள் நல்வரவை நாடும்

S. M. S. முத்துக்குமாரசாமிக்குருக்கள்
தொல்புரம் சுழிபுரம்.

7237

# DARMANANDA INSTITUTES

250, STANLEY ROAD, JAFFNA

## இன்று

I. C M A Section A வார இறுதிப்பிரிவு [Weekend] விரிவுரைகள் ஆரம்பமாகின்றன
ஏனைய பிரிவுகள்
I. A A Part-I and Part-II
CHARTERED Preliminary and Licentiate
I. C. M. A. Section B Part I
ஆரம்பம்:- 28-5 83 காலை 9-00
IAB Final, Inter, Foundation Stages
ஆரம்பம்-- 7-6-83 காலை 9-00

வடமாகாணத்தில் பூரண தகைமைபெற்ற Double Accountants (Chartered I. C. M. A.) போதிக்கும் ஒரே நிறுவனம்

குறிப்பு:- 1. அச்சடித்த விளக்கக் குறிப்புகள் இலவசம்.
2. மாதாந்தம் பகல்நேர பிரிவுகட்கு 150 மணிநேர விரிவுரை
3. யாழ் நகரில் மிகக்குறைந்த கட்டணம்

உங்கள் எதிர்கால நல்வாழ்வே எமது லட்சியம்.

தர்மானந்தா கல்விக்கழகம்
250, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
[ஸ்ரீதர் சினிமா முன்பாக] T. P. 24011

## மருதடி விநாயகர் ஆலய வழிபடுவோர் சங்கம்

மானிப்பாய்

# தருமகருத்தாசபைத் தெரிவு

TR 30 இலக்க வழக்கில் மருதடி விநாயகர் ஆலயம் நம்பிக்கைச் சட்டம் CH 87, 99ம் பிரிவின்படி, பொதுநம்பிக்கைச் சொத்தென பிரகடனம் செய்து அவ்வழக்கில் இணைக்கப்பட்ட பரிபாலனத்திட்டம் ஆலயத்தைச் செவ்வனே பரிபாலிப்பதற்கு சிறந்த ஒரு திட்டம் என்றும், 30-7-82இல் தீர்ப்பளித்த மாவட்ட நீதிபதி அவர்கள், பேணுநர்கள் நியமித்த ஆறு மாதங்களுக்குள் இப்பரிபாலனத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்து, அத்திட்டத்தின்படி, ஆலயத்தைப் பரிபாலிக்க, ஒரு தருமகருத்தா சபையைத் தெரிவு செய்ய வேண்டுமென்றும் கட்டளையிட்டுள்ளார். இத்திட்டத்தின்படி தருமகருத்தா சபைத்தெரிவில் வாக்களிக்கும் உரிமை மருதடி விநாயகர் ஆலய வழிபடுவோர் சங்க அங்கத்தவர்களுக்கே உரியது.

தவிர்க்கமுடியாத சில காரணங்களால் இத் தெரிவு நீதிமன்றத்தின் அனுமதியிடன் பின்போடப்பட்டு, இப்போ எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்துக்குமுன் நடைபெறவிருக்கின்றது. இத்தெரிவில் வாக்களிக்க விரும்புவோர் 30-5-83க்கு முன் சங்க அங்கத்துவம் பெறவேண்டும்.

இச்சங்கத்தில் அங்கத்தவராக விரும்புவோர் விதிக்கப்பட்ட விண்ணப்பப் பத்திரங்களை, வருடாந்தசந்தாப் பணம் ரூபாய் பத்துடன் 30-5-83க்கு முன் செயலாளருக்கு அனுப்பிவைக்க வேண்டும். நிருவாக சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள் அங்கத்துவம் பெறுவர். விண்ணப்பப்பத்திரங்கள் செயலாளரிடம் நேர்முகமாகவோ தபால் மூலமாகவோ பெற்றுக் கொள்ளலாம். தபால் மூலமாகில் தங்களுடைய முகவரியிட்ட 50 சத முத்திரை ஒட்டிய உறையை அனுப்பவேண்டும்.

பழைய அங்கத்தவர்கள் 1982 ஜூலை 1 முதல் 1983 ஜூன் 30 வரை உரிய தங்கள் சந்தாப்பணத்தை 30-6-83க்கு கட்டத் தவறினால் அங்கத்துவத்தை இழப்பர். சந்தாப் பணத்தை தேவஸ்தான அலுவலகத்திலும் கட்டி பற்றுச்சீட்டுகள் பெற்றுக்கொள்ளலாம்.

நிருவாக சபையின் கட்டளைப்படி,
சி. சுப்பிரமணியம்,
செயலாளர்.

சண்முகநிவாசா,
மானிப்பாய்.
14-5-83. 7233

## இன, வகுப்புவாத, மத

# கலகக்காரர்களை விசாரணை செய்ய விசேட நீதிமன்றங்கள்!

## பிரதமர் இந்திரா யோசனை

### பாகுபாடற்ற அதிகாரிகளை பாராட்டவும் முடிவு

புதுடில்லி, மே. 13

இன, வகுப்புவாத, மத கலவரங்களைத் தூண்டி விடுவோர்மீது விசாரணைகளை நடத்த விசேட அதிகாரங்களுடன் கூடிய நீதிமன்றங்கள் அமைக்கப்பட வேண்டும் என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி யோசனை தெரிவித்துள்ளார்.

திருமதி இந்திரா காந்தி தமது இந்த யோசனை அடங்கிய நான்கு பக்கக் கடிதம் ஒன்றை மத்திய உள்துறை அமைச்சர் திரு பி. ஸி. சேத்திக்கு அனுப்பிவைத்துள்ளார்.

திருமதி காந்தியின் யோசனைகளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்தியாவில் முஸ்லிம்கள் உட்பட ஏனைய சிறுபான்மை மக்களின் உரிமைகள் யாவும் பாதுகாக்கப்பட வேண்டும். இன, வகுப்புவாத, மத ரீதியாக கலவரங்களைத் தூண்டுவோர் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும். இவர்களை விசாரணை செய்ய விசேட நீதிமன்றங்களும் அமைக்கப்பட வேண்டும்.

இவற்றுடன் கலவரங்கள் ஏற்படும் பிரதேசங்களிலும், பதட்டநிலை உருவாகும் பகுதிகளிலும் கடமையாற்றவென திறமைசாலிகளான, இன,மத பாகுபாடற்ற பொலிஸ் உத்தியோகத்தர்களும், மாவட்ட ஆட்சித் தலைவர்களும் நியமிக்கப்படவேண்டும். இந்த அதிகாரிகளுக்கு அவர்கள் மேற் குறிப்பிட்ட பிரச்னைகளைக் கட்டுப்படுத்துவதில் கையாளும் சிறந்த வழிமுறைகளைப் பாராட்டி பரிசுகள் வழங்கப்படவேண்டும்.

வன்முறைகளால் பாதிக்கப்படுபவர்களுக்கு உடனடி நிவாரணம் வழங்கப்படுவதுடன் அவர்களது மறுவாழ்வுக்கான பொருளாதார உதவிகளும் போதுமான அளவு வழங்கப்பட வேண்டும்.

பிரதமர் திருமதி காந்தி தமது இந்த யோசனைகளைத் தாமதமின்றி நடைமுறைப் படுத்துவது பற்றி ஆராயுமாறு உள்துறை அமைச்சகத்தைப் பணித்துள்ளார். அத்துடன் இந்த யோசனைகள் நடைமுறைப்படுத்தப்படும் பட்சத்தில் ஏற்படுகின்ற விளைவுகளையும் கால் ஆண்டுக்கு ஒரு தடவை தமக்கு அறியத்தரும் படியும் அவர் பணித்துள்ளார்.

வானொலி, தொலைக்காட்சி என்பனவற்றையும் தமது யோசனைகளை அமுலாக்கும் விதத்தில் பூரணமாகப் பயன்படுத்தும்படி திருமதி காந்தி கேட்டுள்ளார். (இ)

## பின்போடப்பட்டது

(மானிப்பாய்)

யாழ். மாவட்டத்தில் இம்மாதம் 18-ம் திகதி நடைபெறவிருந்த சங்கீத நடனப் போட்டிகள் உள்ளூராட்சி, இடைத் தேர்தல்கள் காரணமாகப் பின்போடப்பட்டுள்ளது. இப்போட்டிகள் வரும் 22-ம் திகதி நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## தேசிய ஒற்றுமை தினம்

புதுடில்லி, மே, 13

இந்திய முன்னாள் ஜனாதிபதி பக்ருதீன் அலி அகமதின் 70வது பிறந்த தினம் தேசிய ஒற்றுமை தினமாக அனுஷ்டிக்கப்படுகின்றது.

இத்தினத்தை கொண்டாடிய நிகழ்ச்சிகளை பிரதமர் திருமதி இந்திரா காந்தி புதுடில்லியில் தொடக்கிவைத்தார்.

இந்திய ஜனாதிபதி திரு. ஸெயில்ஸிங் இத்தினத்தை யொட்டி வெளியிட்டுள்ள செய்தியில், 'ஜனாதிபதி பக்ருதீன் அலி அகமத் ஒரு சிறந்த தேசாபிமானி' என்று குறிப்பிட்டுள்ளார். (இ)

## நிபந்தனையின் பேரில் நால்வருக்கும் பிணை

(வவுனியா)

காந்திய இயக்க அமைப்புச் செயலாளர் டாக்டர் ராஜசுந்தரம் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து ஹர்த்தால் நடத்துமாறுகோரி கடந்த மாதம் 7ம் திகதி வவுனியாவில் துண்டுப் பிரசுரம் விநியோகித்த போது கைது செய்யப்பட்ட நால்வரும் நேற்று முன்தினம் நிபந்தனையுடன் பிணையில் விடப்பட்டனர்.

இதுதொடர்பாகக் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட புஷ்பன் ஜீவன், நிசாந்தினி, ருக்குமணி ஆகிய நால்வரும் நேற்று வவுனியா மாவட்ட நீதிபதி திரு சரத் குணதிலகா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களின் சார்பில் சட்டத்தரணி எம். சிற்றம்பலம் ஆஜராகி இவர்களை பிணையில் விடுதலை செய்யுமாறு கோரினார். இக்கோரிக்கையைப் பொலிசார் ஆட்சேபித்தனர்.

நீதிபதி பொலிசாரின் ஆட்சேபனையை நிராகரித்து, சந்தேகநபர்களை தலா ஆயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதித்து, இம்மாதம் 24ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகும் படியும் ஒன்றுவிட்டு ஒருநாள் வவுனியா பொலிஸ் நிலையத்தில் கையெழுத்திடுமாறும் உத்தரவிட்டார். (வ)

## உ. கி. உதைபந்தாட்டம்:

## அமெரிக்கக் குழுவுக்கு ரீகன் தலைமை!

வாஷிங்டன், மே, 13

1986ம் ஆண்டு உலகக் கிண்ண உதைபந்தாட்டத்தை அமெரிக்காவில் நடத்தவேண்டும் என சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனத்தை அமெரிக்கக் குழுவொன்று கோரிவருகின்றது. இக்குழுவிற்குத் தலைமைதாங்க அமெரிக்க அதிபர் திரு. றொனால்ட் ரீகன் முன்வந்துள்ளார்.

இத்தகவலை வெள்ளை மாளிகைப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். அமெரிக்காவில் அடுத்த உலகக் கிண்ண உதைபந்தாட்டத்தை நடத்தக்கோரும் அமெரிக்கக்குழு தனது கோரிக்கையை மேலும் வலுப்படுத்தும் வகையிலேயே திரு ரீகனை தனது தலைவராக நியமித்துள்ளது.

சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனம் 1986ம் ஆண்டு உலகக் கிண்ண உதைபந்தாட்டத்தை எங்கு நடத்துவதென்பது குறித்து அடுத்த வாரம் தீர்மானிக்கும். இதற்காக சுவீடனின் ஸ்ரொக்ஹோம் நகரில் அச்சம்மேளனம் கூடுகின்றது.

உலகக் கிண்ண உதைபந்தாட்டத்தை அமெரிக்காவில் நடத்த வேண்டுமெனக் கோரும் அமெரிக்கர்களின் முன்னாள் ராஜாங்க அமைச்சர்களான கலாநிதி ஹென்றி கிஸிங்கர், திரு ஸயரஸ் வான்ஸ் ஆகியோர் உட்படப் பல அமெரிக்க வர்த்தகப் புள்ளிகள் முன்நிற்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## ஒளிபரப்பில் யோகாசனம்

சென்னை, மே,13

"தொலைக்காட்சியில் 'யோகாசன அப்பியாசங்களையும்' ஒளிபரப்பவேண்டும். மாணவர்களுக்கு இவ்வொளிபரப்பு அதிக நன்மைதரும்' என்று இந்திய தகவல்துறை அமைச்சர் திரு. எச். கே. எல். பகத் தெரிவித்தார்.

திரு. பகத் சென்னையில் இடம்பெற்ற நிகழ்ச்சியொன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் சிறந்த கல்வி நிகழ்ச்சிகளையும், மற்றும் மாறிவரும் சமுதாய அமைப்புக்கேற்ற தரம்வாய்ந்த நிகழ்ச்சிகளும் ஒளிபரப்பப்பட வேண்டும்' என்றும் அவர் குறிப்பிட்டார். (இ)

## விஸ்தரிப்பு

(கிளிநொச்சி)

பரந்தன் முல்லைத்தீவு வீதியில் மின்சார விஸ்தரிப்பு மேற்கொள்ளப்பட்டது. கிளிநொச்சி எம். பி திரு. வி. ஆனந்தசங்கரியால் வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து ஒதுக்கப்பட்ட 10 ஆயிரம் ரூபா மூலம் இம் மின்சார விஸ்தரிப்பை யாழ். மாவட்ட சபை கிளிநொச்சி உப அலுவலகத்தினர் மேற்கொண்டனர்.

## 'பந்தா'வைகொன்றவருக்கு இரு வருட சிறை!

பீகிங், மே. 13

உலகில் அருகிவரும் விலங்கினங்களில் ஒன்றான 'பந்தா' என்ற விலங்கைக் கொன்று அதன் மாமிசத்தை உண்டதற்காக சீன விவசாயி ஒருவருக்கு இரு வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது!

இரும்புப் பொறி கொண்டே அந்த 'பந்தா'வை லெங் ஸிங் ஹெங் என்ற அவ் விவசாயி பிடித்தார். பின்னர் அதனைத் திருகிக் கொன்று மாமிசத்தை உணவாக்கினாராம்!

'பந்தா' கரடி இனத்தைச் சேர்ந்த ஒரு சிறிய மிருகம் வெள்ளை, கறுப்பு நிறங்களைக் கொண்டது. சீனாவிலேயே இம்மிருகம் காணப்படுகின்றது. உலகில் அழிந்துகொண்டிருக்கும் விலங்கினங்களில் பந்தாவும் ஒன்று. இதனை மேலும் அருகிவிடாது பாதுகாக்கும் வகையில் சீன அரசாங்கம் முயன்று வருகிறது. உலக வனவிலங்கு பாதுகாப்புச் சங்கமும் இம்மிருகத்தைப் பாதுகாப்பதில் அதிக அக்கறை கொண்டுள்ளது. (இ)

## "7-வது அணிசேரா உச்சிமகாநாட்டு வெற்றிக்கு இந்திராவே காரணம்!"

### -- சோவியத்பிரதிப்பிரதமர்

புதுடில்லி, மே, 13

"ஏழாவது அணிசேரா உச்சிமகாநாட்டின் பெருமளவு வெற்றிக்கு இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியே காரணம்" என்று இந்தியாவந்துள்ள சோவியத் யூனியனின் முதலாவது பிரதிப் பிரதம மந்திரி திரு ஆக்கிப்போவ் தெரிவித்தார்.

திரு ஆக்கிப்போவ், அணிசேரா இயக்க நடவடிக்கைகளும், தீர்மானங்களும் சோவியத் யூனியனைக் கவர்ந்துள்ளன என்றும் குறிப்பிட்டார்.

திரு ஆக்கிப்போவ் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியையும் சந்தித்து உரையாடினார். இரு தலைவர்களும் படைக் குறைப்பின் அவசியத்தை வலியுறுத்தி தமது கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டனர்.

இந்தியாவின் முக்கிய அமைச்சுகளுக்குப் பொறுப்பான அமைச்சர்களுடனும் சோவியத் பிரதிப் பிரதமர் பேச்சுக்களை நடத்தினார். அப்பேச்சுக்களில் இந்தியாவின் விஞ்ஞான தொழில்நுட்ப ஆராய்ச்சிகளுக்கும், அபிவிருத்தித் திட்டங்களுக்கும் சோவியத் தொடர்ந்து உதவியளிக்குமென்று சோவியத் பிரதிப் பிரதமர் உறுதியளித்தார். (இ)


மிளகாய் இலைச் சுருளைத் தடுத்து அதிக விளைச்சலைப் பெறுங்கள்


BASF

குமுலுஸ் எஸ்

நீரில் கரையக் கூடிய 80% கெந்தகம்

- நீரில் கலந்தவுடன் பால் நிறமாக மாறுகிறது.
- மிளகாய் இலைச் சுருளைத் தோற்றுவிக்கும் மைட்களை அழித்தொழிக்கிறது.
- மரக்கறி பயிர் வகைகளில் 'காளான்' தாக்கத்தைக் கட்டுப்படுத்துகிறது

இது ஒரு "மேற்கு ஜெர்மனி 'BASF' தயாரிப்பாகும்.




குமுலுஸ் எஸ்

500 கிறாம் ரூபா 15/50

கிடைக்குமிடம்: சகல விவசாய இரசாயனப் பொருள் விற்பனையாளரிடமும்

மக்வுட்ஸ் ஸ்தாபனம்

297, யூனியன் பிளேஸ், கொழும்பு 2.

தொலைபேசி: 32941-5

Metropolitan

### மணிவாக்கு

ஒரு மனிதனுக்கு அதிர்ஷ்டம் வரும்போது அவனுடைய எருதே கன்றுபோடும்.

— யூதர் பழமொழி

# நமது நோக்கு

## பிடிவாதம் தவிர்ந்த பொதுக் கருத்து வேண்டும்

இன்னும் நாலு தினங்களில் உள்ளூராட்சிமன்றங்களின் தேர்தல் நடைபெறவிருக்கின்றது.

தமிழ் மக்களைப் பொறுத்தளவில் தீர்வு காணப்படாத அரசியல் அமைதியின்மையின் பின்னணியில் இத்தேர்தல் நடைபெறுகின்றது.

பொறுப்புவாய்ந்த கட்சி தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற தம்மைக் குறிப்பிட்டு "தமிழீழம் முழுவதுமுள்ள நிலைமையைக் கருத்திற்கொண்டே தாம் எதனையும் முடிவு செய்ய முடியும் என்றும், எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வாக்காளர்கள் புத்திசாலித்தனமாகவாக்களிக்கவேண்டுமென்றும் கூட்டணித் தலைவர்களின் அறிக்கை கூறுகின்றது.

இதே நேரத்தில் கூட்டணி வேட்பாளர்கள் சிலர், 'பல இளைஞர்களின்வேண்டுகோளுக்கிணங்க' தேர்தல் போட்டியிலிருந்து விலகிக்கொள்வதாக அறிவித்தல் விடுத்திருக்கின்றனர்; தனிப்பட்ட வேட்பாளர்களெடுக்கும் எந்த முடிவும் தேர்தலை எவ்வகையிலும் பாதிக்கமாட்டாதென்று தமிழர் விடுதலைக் கூட்டணி வாக்காளருக்கு விடுத்தஅறிக்கையில் விளக்கியிருக்கின்றது.

உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தலை ஒட்டி இங்கு ஒரு குழப்பமான மனநிலை இருப்பதை இந்த அறிக்கை ஏற்றுக்கொள்கின்றது.

குழப்பமான மனநிலைக்கு முக்கிய காரணம் இளைஞரின் தீவிரவாதமென்று கருதப்படுகிறது.

அண்மையில் குழப்பம் ஏற்பட்ட கூட்டத்தில் கூட்டணித் தலைவர் திரு அ. அமிர்தலிங்கத்திற்கு அங்கு வந்திருந்த சில இளைஞர் விடுத்த கேள்விகள் அவர்களின் உள்ளக் குமுறலை வெளிப்படுத்துகின்றன.

"30 வருடம் நடத்திய சாதனைகள் எவை? என்பதொரு கேள்வி: கடந்த பத்துவருடங்கள் நாங்கள் அலைந்துதிரிகின்றோமே" என்பது மற்றைய சோக முறையீடு.

தமிழ் மக்கள் மத்தியில் மட்டுமல்ல: இந்த நாட்டிலும் இன்னும் பல நாடுகளிலும் இளைஞர் கொந்தளிப்பு மேலோங்கி நிற்பது கண்கூடு.

இளைஞர் இயக்கங்களின் அதிகாரம் அரசியலில் அவர்களுக்குரிய பங்கை அலட்சியம் செய்வதே.

இன்றைய உலகம் இளைஞர் விழிப்படைந்த உலகம்; இதற்கு இந்த நாடு விதிவிலக்கல்ல; அதுவும் தமிழ் இளைஞர்களின் மன உடைவு தனித்துவமானது.

சிங்கள இளைஞர்களின் அமோக ஆதரவுடன் 1971ம் ஆண்டு அரசைக் கைப்பற்றிய சிறிலங்கா சுதந்திரக் கூட்டணி ஆட்சிக்குஆதரவு நல்கிய அதே இளைஞர் இயக்கம் ஆறு மாதங்களில் விடுத்த பயங்கர சவாலையும் அதன் விளைவையும் நாம் மறக்கவில்லை.

இவ்வித இளைஞர் எதிர்ப்பியக்கம் என்ன விளைவு ஏற்படுத்துமென்பதை நாமிங்கு ஆராய முற்படவில்லை. அதுவிடயத்துக்குப்பொருத்தமானதுமில்லை.

இளைஞர் உலகம் தன்னுடைய நோக்கங்கள் நிறைவேறுவதில் தாமதத்தைச் சகிக்கமாட்டாது; பொதுவாகப் பொறுமையற்ற மனமுதிர்ச்சியற்ற சமுதாயமிது.

அதே சமயம் தங்களுக்கு வழிகாட்ட முற்பட்ட தலைவர்களில் சந்தேகம் ஏற்பட்டால் அவர்கள் தீவிரவாதச் செயல்களில் துணிச்சல் கொள்வது இன்று உலகில் பல பாகங்களிலும் நாம் காணும் சகஜமான காட்சி.

தமிழ் இளைஞர்கள் பொறுமையற்றவர்களென்று நாம் முடிவுசெய்தல் நியாயமல்ல; அவர்களின் குறைகள் நீங்கி, வாழ்க்கையில்முன்னேறவழி பிறக்குமென்றுநம்பி நீண்டகாலம் பல துன்பங்களுக்கு ஆளானவரென்பதைமறுக்க முடியாது.

இன்று தலைவர்களின் தீர்மானங்களை நிராகரிப்பதும் வளர்ந்தோர் சமுதாயத்தில் அவநம்பிக்கை கொள்வதும் அவர்களின் மனவிரக்தியின் தடிப்பை வெளிப்படுத்துகிறது.

இந்த முரண்பட்ட சூழ்நிலையில் அரசியல் தலைவர்களும் இளைஞர் குழுவினரும் பிடிவாதம் கொள்ளுதல் இயல்பானாலும் பொதுமக்களுக்கு சிறப்பாக வாக்காளர்களுக்கு மனக்குழப்பம் ஏற்படுத்துவதைக்கருத்திற் கொள்ளவேண்டும்.

தமிழ்மக்கள் பெருமளவில் நம்பிக்கை வைத்திருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி இதுவரை ஒரு மக்கள் எதிர்ப்பியக்கம் உருவாக்க முடியாமற்போனது அவர்களின் அரசியல் தன்மைக்கு இழுக்கானது.

அரசியல் தந்திரமென்ற நுணுக்கங்களில் நாம் சரணடையாது, ஆதரவு கோரிய மக்களை அடிக்கடி சந்தித்து தம்கொள்கைகள் திட்டங்கள் பற்றியவிளக்கமளித்து மக்கள் நம்பிக்கையையும் மனோதிடத்தையும் வளர்க்கத் தவறியது இன்றைய சந்தேக நிலைக்கு பெருங்காரணம்.

மக்கள் போராட்டத்துக்கு ஆயத்தமில்லை என்பது தலைவர்களின் பலவீனத்தையே நிரூபிக்கிறது.

இந்த நிலை துன்ப நிலையானாலும் வருகிற உள்ளூராட்சித் தேர்தலில் தெளிவான பொதுக் கருத்து உருவாகுதற்கு இளைஞர் ஒத்துழைப்பை எவ்வகையிலும் திரட்டுவது தமிழ் மக்களின் எதிர்கால அரசியலுக்கு அவசியமானது.

# "பனாகொடை முகாமில் நிர்வாணகோலத்துடன் தமிழ் இளைஞர்களுக்குச் சித்திரவதை"

(கொழும்பு)

"பனாகொடை இராணுவ முகாமில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்கள் எல்லோரும் நிர்வாணமாக்கப்பட்டு, இரவிரவாகச் சித்திரவதை செய்யப்பட்டுத் துன்புறுத்தப்பட்டதாக சாந்திய இயக்கத்தலைவர் டாக்டர் ராஜசுந்தரம் என்னிடம் தெரிவித்தார்."

சுப்ரீம் நீதிமன்றத்தில்; சட்டத்தரணி ஜி குமாரலிங்கம் நேற்று முன்தினம் தாக்கல் செய்துள்ள சத்தியக்கடுதாசியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சத்தியக்கடுதாசியில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

"நானும் சட்டத்தரணி சத்திரசேனனும், டாக்டர் ராஜசுந்தரத்தைப் பார்க்கமுகாமிற்குச்சென்றோம்.

"அவர் மெலிந்து காணப்பட்டார். நடக்க முடியாத நிலையிலிருந்தார். எங்களுடன் மெதுவாகவே பேசினார்.

"முகாமில் தாம் பலவாறு கொடுமைப்படுத்தப்பட்டதாகக் கூறினர் தன்னைச் சித்திரவதைசெய்து கடுமையாகத் துன்புறுத்தினார்களென்றும் இம்மாதம் 8ம் தேதி ... மாகத் தன்னை தாக்கினார்களென்றும் கூறினர் 8ம் தேதி காலையில் ... தாக்கப்பட்டதாகவும், பின்னர் மாலைமுதல் நள்ளிரவு வரை தொடர்ந்து தாக்கினார்களென்றும், இம்மாதம் 8ம் தேதி முகாமிலுள்ள தமிழ் இளைஞர்கள் எல்லாரும் நிர்வாணமாக்கப்பட்டுச் சித்திரவதை செய்யப்பட்டனர் மறுநாள் காலையே உடைகளைக் கொடுத்தார்களென்றும் கூறினார்.

"பொய்யான சில வாக்குமூலங்களைத் தன்னிடமிருந்து பெறுவதற்காக இரகசியப் பொலிசார் பலமுறை தாக்கினார்கள் என்றும் நீதிமன்றம் மூலம் நியாயம்பெற்றுத்தருமாறும் டாக்டர் ராஜசுந்தரம் கூறினார்.

நீதிமன்றத்தின் முன்வந்து சாட்சியமளிக்கவும் தயாராகவும் அவர் தெரிவித்தார். (இ)

# கலை உலகை கவலைக்கடலில் ஆழ்த்திய தவில்மேதை தெட்சணாமூர்த்தி

லயஞான குபேர பூபதி தவில்மேதைதெட்சணாமூர்த்தி அவர்கள் மறைந்து 8 ஆண்டுகளாகின்றன, அகில உலகதவில் மேதையாகத் திகழ்ந்து தமக்கு ஒப்பாரும், மிக்காரு மின்றி நாதப் பிரவாகமாக விளங்கிய அமரர் தெட்சணாமூர்த்தி மறைந்தபோதும் அவரது பெயர் இன்றும் நிலைத்துநிற்கின்றது அவரது தவில் நாதம் இன்றும் கேட்டுக்கொண்டே இருக்கின்றது.

இசை வேளாளர் மரபில் வந்த இணுவில் விசுவலிங்கம்–இரத்தினம் தம்பதிகளின் புதல்வராகத் தோன்றிய தெட்சணாமூர்த்தி தமக்கியல்பாகவே அமைந்த லயஞானம், கற்பனை என்பவற்றின் துணைகொண்டு தனித்துவமான தொரு பாணியை வகுத்து தவில் வாசிப்பதில் நிகரற்று விளங்கி நாதஸ்வரத்திற்குத் தவில் துணை வாத்தியம் என்ற மரபே தலைகீழாக மாற்றி அமைக்கப்படுமளவுக்கு இசைப்புரட்சி செய்தவர்.

தமிழக இசை விழாக்களிலும், மற்றும் தமிழக சமய நிகழ்ச்சிகள் பலவற்றிலும் கலந்து கச்சேரிசெய்தும், மலேசியாவில் கச்சேரிகள் நிகழ்த்தியும் பெரிதும் பாராட்டுப்பெற்ற அமரர் தெட்சணாமூர்த்தி தமது 41வது வயதில் கலையுலகை – கவலைக் கடலில் ஆழ்த்தி அமரரானார்.

தவிலிலேயே 25 ஆண்டு காலம் அவரது கை பேசியது தவில் வாசிக்க ஆரம்பித்ததும் புத்தி, சித்தம், காயம் மூன்றும் ஒன்றுகலயிக்க நாதயோகத்தில் அவர் ஆழ்ந்துவிடுவார். அவர் வாழ்ந்த காலம் முழுவதும் அவரது பெயரை ரசிகர்களின் நா பேசியது.

இத்தனை பெரும் கலைஞர் அமரரானபோதும் அவரது கச்சேரியின் ஒலிப்பதிவு நாடாக்கள் இன்றும் நமது கலைஞர்களுக்கு வழி காட்டிக்கொண்டிருக்கின்றன, அவரது புதல்வர் உதயசங்கர் இன்று தவில்வாத்தியத்தில் முன்னேறிவருகின்றார் அவரை நமது கலைஞர்கள் என்றும் நினைவுகூரவேண்டும். அவரது கலைத்திறனைப் பின்பற்றவேண்டும். இதுவே அவருக்கு நாம் செய்யக்கூடியதாகும்.

-எஸ். ஆர். ஞானசுந்தரம்

[செயலாளர் – இலங்கை இசை வேளாளர் சங்கம்]

## யாருடைய திறப்புகள்?

கைதடியைச் சேர்ந்த திரு. வ. ஆறுமுகம் என்பவர் மின்சாரநிலைய வீதிக்கு முன்பாக ஒரு திறப்பையும், கட்டைப்பராயைச் சேர்ந்த திரு. எஸ். மகேந்திரநாதன் என்பவர் யாழ் கஸ்தூரியார் வீதியில் ஒரு திறப்புக்கோர்வையையும் கண்டெடுத்து 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளனர் உரியவர்கள் அத்தாட்சி காட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

## உற்சவம்

(அரவெட்டி)

துன்னாலை வடக்கு அல்லையம்பதி ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி கோவில் வருடாந்த உற்சவம் 16ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. 24ம் திகதி இரதோற்சவம் நடைபெறவுள்ள இவ்வுற்சவம், 25ம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவுறும்.

## ரூபவாஹினியில் இன்று

மாலை

| | |
|---|---|
| 6-00 | நிகழ்ச்சி முன்னோட்டம் |
| 6-01 | ஆங்கில நிகழ்ச்சி |
| 6-15 | விளையாட்டு நிகழ்ச்சி |
| 6-40 | தேர் உற்சவம் (இந்து சமய நிகழ்ச்சி) |
| 7-00 | செய்தி மஞ்சரி (தமிழ்) |
| 7-15 | இசை நிகழ்ச்சி (சிங்களம்) |
| 7-45 | கல்வி நிகழ்ச்சி |
| 8-15 | செய்தி மஞ்சரி (சிங்களம்) |
| 8-30 | நாடகம் (சிங்களம்) |
| 9-00 | 9-வது 'ஆசியாட்' பந்தயங்கள் |
| 9-30 | செய்தி மஞ்சரி (ஆங்கிலம்) |
| 9-45 | 'ஆசியாட்' தொடர்ச்சி |

## வைரவர் தோத்திரம்

9 சீற்றமா வடிவாய் போற்றி
சேருந் திறத்தாய் போற்றி
ஏற்றவெண் குணத்தாய் போற்றி
ஏசற விசைப்பாய் போற்றி
சாற்றருந் தவத்தாய் போற்றி
தகுவா தீரா போற்றி
மாற்றிமில் மருந்தே போற்றி
வைரவா போற்றி போற்றி.

10 பரவரும் பதத்தாய் போற்றி
பண்டறி பரமா போற்றி
அரனுருக் கொண்டாய் போற்றி
அம்பிகைக் கமைவாய் போற்றி
சிரவணப் பொருளே போற்றி
செருமுகத் துதிப்பாய் போற்றி
வரமருள் கரத்தாய் போற்றி
வைரவா போற்றி போற்றி.

11. அந்தமை யகழ்வாய் போற்றி
அருளுரு வானாய் போற்றி
உகந்தொறு மொளிர்வாய் போற்றி
உயிர்க்கு துணையே போற்றி
சுகந்தனிற் சுகமே போற்றி
சூழ்களை யறுப்பாய் போற்றி
மகந்தனில் மகமே போற்றி
வைரவா போற்றி போற்றி

12. முடுகனற் படையாய் போற்றி
மூளனல் காற்றாய் போற்றி
கொடுமலங் குறைப்பாய் போற்றி
கோசரர்க் கபயா போற்றி
அடுதுயர் களைவாய் போற்றி
ஆறுதல் தருவாய் போற்றி
வடுகனே குமரா போற்றி
வைரவா போற்றி போற்றி.

-- ச. தங்கமாமயிலோன்

,வேட்பாளர்

# பட்டியலிலிருந்து வெளியேறினுலும் கூட்டணிக்கு விசுவாசமாயிருப்பேன்''

— டாக்டர் ஏபிரகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபைத் தேர்தலிலிருந்து தாம் விலகிக் கொள்வதாகத் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் டாக்டர் ஏ எல் ஏபிரகாம் அறிவித்து வெளியிட்ட அறிக்கையின் முழு விபரம் இங்கு தரப்படுகிறது இதன் ஒருபகுதி தான் நேற்றைய 'ஈழநாடு' இதழில் வெளியானது.

அறிக்கை விபரம் வருமாறு:

பல இளைஞர்களின் வேண்டுகோளுக்கிணங்க நான் இப்போட்டியிலிருந்து விலகிக் கொள்கிறேன்.

''கடந்த 20 ஆண்டுகளாகத் தமிழ் காங்கிரஸ் கட்சியில் அங்கத்தவராக இருந்து பல தடவைகள் அக்கட்சியின் வேட்பாளராகத் தெரிவுசெய்யப்பட்டு மாநகரசட்சி மன்றம் சென்றுள்ளேன்

தமிழரசுக் கட்சிக்குப் பலம் வாய்ந்த எதிர்க்கட்சியாக இருக்கவேண்டுமென்ற காரணத்தால் காங்கிரஸ் கட்சியில் அங்கம் வகித்து வேட்பாளராக வந்த நான், அண்மைக் காலத்தில் நடந்த பல அரசியல் சம்பவங்களை ஆராய்ந்து தமிழர்களின் இன்னல்களைத் துடைக்க ஒருங்கிணைந்து ஒரே அமைப்பின் கீழ் செயல்பட வேண்டுமென்ற காரணத்தால் தமிழ்க் காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகி, தமிழர்களின் அங்கீகாரத்தைப்பெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியில் சேர்ந்துகொண்டேன்.

தமிழர்களின் இப்பேரியக்கம் பாராளுமன்றத்திலும், வெளியிலும் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட பல சோதனைகள், கஷ்ட நஷ்டங்கள், இளைஞர்களுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட்டம், மதகுருமார், விரிவுரையாளர்களுக்கு ஏற்பட்ட இன்னல்கள் ஆகியவற்றுக்கெதிராகத் தங்களது கண்டனத்தை தெரிவித்து உண்ணாவிரதம், மௌன ஊர்வலம் போன்ற நடைவடிக்கைகளை எடுத்தது.

தமிழ்க் காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரையில் பத்திரிகை அறிக்கைகள்மூலமும் கட்சியின் தீர்மானங்கள் மூலமும் தங்களது எண்ணத்தை வெளியிட்டார்களே தவிர. வேறு எந்தவிதமான கண்டன நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லையென்றும், சில சந்தர்ப்பங்களில் த. வி. கூட்டணி எடுத்துக்கொண்ட நடவடிக்கைளுக்கு ஆதரவளித்துப் பங்குபற்றவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளானார்கள்.

''தமிழ்க் காங்கிரஸ் கட்சி கடந்த ஜனாதிபதித் தேர்தலில் முதன்முறையாக தமிழீழக் கோரிக்கையை முன்வைத்துப் போட்டியிட்டது. ஆனால் த. வி. கூட்டணி கடந்த 12 வருடங்களாக இக்கோரிக்கைக்காகப் பல போராட்டங்கள், தியாகங்களைச் செய்தவந்துள்ளது.

''இச் சூழ்நிலையில் பல காலமாகத் தமிழீழக்கோரிக்கையை முன்வைத்துச் செயலாற்றிய த. வி. கூட்டணியுடன் சேர முடிவுசெய்தேன். அவர்களின் வற்புறுத்தலின் பிரகாரமும் எனது வட்டார மக்களின் வேண்டுகோளுக்கிணங்கவும் மாநகரசட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட முன்வந்துள்ளேன் தற்போது இப்போட்டியிலிருந்து நான் விலகுகின்ற போதிலும் த. வி. கூட்டணிக்கு விசுவாசமாக என்றும் உழைப்பேன் என்று கூறிக் கொள்வதுடன் எனக்கு வேட்பாளராக வாய்ப்பளித்த எனது கட்சிக்கும், எனக்கு ஆதரவளித்த வாக்காளர்களுக்கும் குறிப்பாக குருநகர் மக்களுக்கும் எனது நன்றியைத்தெரிவித்துக்கொள்கிறேன். (ஏ)

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க




# சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

கொழும்பு தலைமைக்காரியாலயத்தில் இழுக்கப்பட்ட 931வது தேசிய லொத்தர் சபை முடிவுகள் வருமாறு:

முதலாம் பரிசு

**01 K 0522**

ரூபா 1,49,000-00

இரண்டாம் பரிசு

**10 N 0074**

ரூபா 55,875-00

மூன்றும் பரிசு

**14 S 0865**

ரூபா 18,625-00

தலா ரூபா 670-50 சதம் கொண்ட 100 ஆறுதல் பரிசு முடிவுகள் வருமாறு:-

| | |
|---|---|
| 01 A 0774 | 06 A 0944 |
| 08 A 0103 | 10 A 0579 |
| 08 B 0876 | 04 C 0474 |
| 05 C 0551 | 10 C 0629 |
| 10 C 0638 | 16 C 0335 |
| 18 C 0005 | 18 C 0550 |
| 01 D 0139 | 05 D 0007 |
| 05 D 0103 | 07 D 0439 |
| 01 E 0923 | 07 E 0125 |
| 12 E 0991 | 14 E 0444 |
| 03 F 0666 | 06 F 0587 |
| 16 F 0759 | 16 F 0845 |
| 17 F 6052 | 02 G 0388 |
| 06 G 0788 | 15 G 0394 |
| 17 G 0243 | 18 G 0425 |
| 08 H 0702 | 12 H 0292 |
| 18 H 0 24 | 04 J 0109 |
| 12 J 0344 | 12 J 06[illegible]9 |
| 14 J 0939 | 16 J 0014 |
| 19 J 0539 | 01 K 0846 |
| 12 K 0140 | 02 L 0[illegible]65 |
| 15 L 0537 | 18 L 0766 |
| 01 M 0199 | |
| 03 M 0361 | 06 M 0732 |
| 18 M 0296 | 13 N 06 0 |
| 17 N 0894 | 18 N 0898 |
| 05 O 0586 | 15 O 0882 |
| 01 P 0232 | 02 P 0470 |
| 07 P 0333 | 09 P 0245 |
| 10 P 0015 | 12 P 0164 |
| 13 P 0728 | 02 Q 0025 |
| 03 Q 0954 | 07 Q 0297 |
| 10 Q 0913 | 14 Q 0834 |
| 01 R 0571 | 07 R 0804 |
| 12 S 0800 | 15 S 0200 |
| 18 S 0031 | 01 T 0608 |
| 06 T 0332 | 05 T 0038 |
| 10 T 0242 | 11 [illegible] 0595 |
| 06 U 0480 | 36 U 0 [illegible]0 |
| 09 U 0946 | 14 U 0390 |
| 5 U 0162 | 07 V 0725 |
| 11 V 0213 | 14 V 0357 |
| 15 V 0142 | 10 W 0170 |
| 10 W 0607 | 16 W 0 08 |
| 7 W 0974 | 06 Y 0040 |
| 07 Y 0669 | 12 Y 0997 |
| 13 Y 0114 | 16 Y 0623 |
| 01 Z 0[illegible]47 | 10 Z 0887 |
| 04 Z 0303 | 04 Z 0963 |
| 09 Z 0286 | 12 Z 0958 |
| 13 Z 0506 | |

[இவையாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும்]

# இன்றைய பலன்

சித்திரை மாதம் 31-ம் திகதி சனிக்கிழமை (14-5-83)

மேடம்: இனபந்துக்கள் மத்தியில் பூசல்கள் தோன்றும் மனக்குழப்பச்சலினுல் வேதனைப்படுவீர்கள் சிறிய விஷயத்திற்கும் இடமுண்டு பிள்ளை ஒன்றின் கல்வி தடைப்படலாம்.

இடபம்: சமயோசிதமான நடவடிக்கையின் மூலம் எதையும் சமாளித்துக் கொள்வீர்கள் இல்லத்தில் அமைதி நிலவும் பூமியால் இலாபமுண்டு பேச்சு வார்த்தைகள் இன்று அதிக பயனை அளிக்கும்.

மிதுனம்: பேராசையின் மூலம் குறுக்குவழியை நாடுவீர்கள் இதனால் பெரிதங்கள் தோன்றக்கூடும் மறைமுகமான எதிர்ப்புக்களும் தோன்றும் ஆசை அலைகளினால் அவப்பெயருக்கு இடமுண்டு.

கடகம்: கனிவான நினைவலைகளில் இன்று ஆனந்தமாக மிதந்து செல்வீர்கள் கல்வித்துறையில் வித்துவத்தன்மை தென்படும் வாகனம் செலுத்துபவர்கள் மக்களின் ஆதரவைப் பெறுவர் சுபதினம்

சிம்மம்: செய்தொழிலால் சிறப்புண்டு மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும் சிலருக்கு அதிர்ஷ்ட லாபமும் உண்டு சுற்றுடலில் நல்ல சூழ்நிலை உருவாகும் உற்சாகமாக இருப்பீர்

கன்னி: ஆமை வேகத்தில் காரியங்கள் நடைபெறும் பகைவர்களின் சூழ்ச்சி பலமாக இருக்கும் காண்டு தொல்லையால் கடன்படநேரிடலாம் இடைக்காலம் பிரிவுக்கும் இடமுண்டு.

துலாம்: வாழ்வுப் பயணத்தில் இன்று வளமான திருப்பம் ஏற்படும் இலட்சிய வாதிகள் பூரிப்படைவார்கள் குடும்பத்தில் குதூகலமான சம்பவம் இடம்பெறும் பொதுவாக மன நிறைவுக்கு இடமுண்டு.

விருச்சிகம்: வாழ்க்கை ஒரு சுமையாகத் தோன்றும் கடன் தொல்லைகள் அதிகரிக்கும் நண்பர் ஒருவர் கவலை ரிவிடக்

(8ம் பக்கம் பார்க்க)

## வடபிராந்திய போக்குவரத்துச் சபை சுற்றுலா விடுதியில் வீட்டுத் தளபாடங்கள் பொருட்கள்

# ஏல விற்பனைக்கு

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் யாழ்ப்பாணம்—கொழும்புத்துறை வீதி, பீச் ரோட்டில் அமைந்துள்ள சுற்றுலா விடுதியில் வீட்டுத்தளபாடங்கள், குளிர்சாதனப்பெட்டி, மின்சார உபகரணங்கள் உட்படப் பல பெறுமதிமிக்க சாமானங்கள் பகிரங்க ஏலத்தில் 28-5-83-ந் திகதியன்று காலை 9 மணிமுதல் விற்பனைசெய்யப்படும்.

பொருட்களைக் கொள்வனவுசெய்வோர் முழுத் தொகையையும் உடன் செலுத்திப் பொருட்களை மாலை 3 மணிக்கு முன்னர் அப்புறப்படுத்தவேண்டும்.

நுழைவுப் பணமாக ஒருவர் ரூபா 25/-செலுத்த வேண்டும். பொருட்களை 25-5-83-ந் திகதி காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை பார்வையிடலாம்.

மேலதிக விபரங்களுக்கு:

க. தனபாலசிங்கம்,
பொதுசனத் தொடர்பு அதிகாரி,
வடபிராந்திய போக்கு வரத்துச் சபை,
இல: 165, -ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்
என்ற விலாசத்திற்குத் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இல: 22114, 22115, 23851.

சி. கனகரத்தினம்
தலைவர்,
தலைமை அதிகாரி,
வடபிரதேச போக்குவரத்துச் சபை
யாழ்ப்பாணம். [7249]

# லங்கா சீமெந்து லிமிட்டெட்

# துறைமுக அபிவிருத்தி


## காங்கேசன்துறை

**காலாகாலமாக தலையில் சுமந்து ஒரு கில்லோ மீற்றர் தூரத்திற்கு கால் கடுக்க கடலில் நடந்து சென்று பொதிகளை வள்ளங்களில் ஏற்றி இறக்கிய காலம் கடந்த 30-ம் திகதியுடன் மறைந்துவிட்டது. லங்கா சீமெந்து லிமிட்டெட் ஆல் அமைக்கப்பெற்ற இறங்கு துறைகளின்மூலம் (JETTY) பொதிகள் நேரடியாக வள்ளத்தில் ஏற்றப்பட்டு கப்பலுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன.**

கீரிமலை வீதியில் கம்பீரமாக காட்சியளிக்கும்

**"ஹாபர் வியூ ஹோட்டல்"**

முகப்புத் தோற்றம்




முற்றிலும் குளிரூட்டப்பட்ட விசாலமான மண்டப வசதிகள் கொண்டது.

வடமாகாணத்திலேயே சகல வசதிகளும் பொருந்திய ஒரேஒரு உல்லாச பயண ஹோட்டல் இதுவே !

**கட்டண விபரங்கள் :**

| குளிரூட்டிய அறைகள் | தனியாள் | இருவர் |
|---|---|---|
| அறையும் காலை உணவும் | ரூ. 230/- | ரூ. 310/- |
| ,, காலை, இரவு உணவும் | ,, 290/- | ,, 430/- |
| ,, மூன்றுநேர உணவும் | ,, 340/- | ,, 530/- |
| குளிர்சாதனம் அற்ற அறைகள் | | |
| அறையும் காலை உணவும் | ,, 180/- | ,, 260/- |
| ,, காலை, இரவு உணவும் | ,, 240/- | ,, 380/- |
| ,, மூன்றுநேர உணவும் | ,, 290/- | ,, 480/- |



**பாரிய கப்பல் ஒன்று முதல்முறையாக மிதக்கும் கோளத்துடன் துறைமுகத்தில் கட்டப்பட்டுள்ளது. நாள் ஒன்றுக்கு 650 தொன் உப்பு துரித கதியில் ஏற்றப்படுகின்றது.**

20 அடிக்கு குறையாத கப்பல் கட்டுவதற்கு வசதியுண்டு

10,000 தொன் சரக்குகள் ஏற்றி இறக்குவதற்கு உதவி செய்துதரப்படும்

ஒரே தரத்தில் 200 தொன் சரக்கு ஏற்றக்கூடிய பாதை (BARGE) வசதிகள் உண்டு

ஒரே நாளில் 750 தொன் ஏற்றி இறக்கக்கூடிய பாரம்தூக்கி (CRANE) வசதிகள் உண்டு

நங்கூரம் இடப்படும் கப்பல்களுக்கு குடிதண்ணீர் வசதி உண்டு

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

**பொது முகாமையாளர்,**
லங்கா சிமெந்து லிமிட்டெட்,
காங்கேசன்துறை.

7230

வெளிச்சமற்ற நெருக்கமான அறையில

# நவரத்தினராஜாவின் சடலம்

## வெறும் தரையில் மல்லாந்துகிடந்தது

### மரணவிசாரணையில் மேலதிக நீதவான் சாட்சியம்

(ஏ. வி. மாணிக்கம்)

(யாழ்ப்பாணம்)

''இறந்தவரின் சடலம், ஒரு காம்பறை (சிறைக்கூண்டில்) மேல் பார்த்த நிலையில் வெறும் சிமெந்து நிலத்தில் கிடந்தது பாயோ, தலையணையோ காணப்படவில்லை விளக்குகள் ஒன்றும் எரியவில்லை வெளியில் இருந்து அறைக்குள் வந்த மங்கலான வெளிச்சத்தில் சாரமும் சேர்ட்டும் அணியப்பட்டிருந்தது தெரிந்தது சடலத்தைத் தகுந்த வெளிச்சத்தில் பரிசோதிக்க வசதியாக இருக்கும் என்று கருதி யாழ் ஆஸ்பத்திரிப் பிரேத அறைக்கு அனுப்பும்படி கட்டளையிட்டேன்.''

இவ்வாறு யாழ். மேலதிக நீதவான் திரு கே. பி எஸ். வரதராசா நேற்று யாழ் நீதிமன்றத்தில், குருநகர் இராணுவ முகாமில் கடந்தமாதம் 10-ம் திகதி மரணமான கிளிவெட்டியைச் சேர்ந்த நவரத்தினராசா தொடர்பான மரண விசாரணையில் சாட்சியமளிக்கையில் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் நீதவான் எஸ். நாகராசா முன்னிலையில் நேற்றுப் பிற்பகல் இவ்விசாரணை நடைபெற்றது.

இறந்த நவரத்தினராசாவின் நலனைக் கவனிக்க சிரேஷ்ட சட்டத்தரணி ஆர் தவராசா, சட்டத்தரணிகளான இராஜா விசுவநாதன், ஏ. தெய்வேந்திரம், ஜனாப் ஐ ஆர். எம் இமாம், ஏ. லிங்கராசா ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார்.

இராணுவத்தினரின் சார்பில் அரச சட்டத்தரணி ஏ. ஜி டி. சொய்சா, சட்டத்தரணிகளான ஏ பி எல் டி. சில்வா, டபிள்யூ ஜீ ஆர் ஜே சில்வா, காப்டன் திஸநாயக்கா ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார்.

யாழ் உதவிப் பொலிஸ் அதிபர் திரு ரி. மனோகரன் சாட்சியங்களை நெறிப்படுத்தினார்.

மேலதிக நீதவான் திரு. வரதராசா மேலும் சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது!

10-4-83ல் யாழ். நீதவானுக்குப் பதிலாகக் கடமையாற்றினேன். அன்றையதினம் காலை குருநகர் இராணுவ முகாமில் தடுத்துவைத்திருந்த நவரத்தினராசா இறந்து விட்டதாகவும் அது சம்பந்தமாக மரணவிசாரணை நடாத்தும்படியும் பொறுப்பதிகாரி எனக்கு அறிவித்தார் அதன் பிரகாரம் நான் குருநகர் இராணுவ முகாமுக்குச்சென்றேன். பொலிஸ் பொறுப்பதிகாரியும், இரு பொலிஸ் கான்ஸ்டபிள்களும் வந்தனர் இராணுவ முகாமில் உதவிப் பொலிஸ் அதிபர் திரு. மனோகரனும் நின்றார் அவருடன் இராணுவ அதிகாரிகளும் நின்றனர், இறந்தவரின் சடலம் கிடந்த இடத்துக்கு என்னை அழைத்துச் சென்றனர். சடலம் ஒரு காம்பறையில் (சிறைக்கூண்டில்) கிடந்தது. அந்த அறை கட்டிடத்திலுள்ளது அந்த அறை 6 அடி 5 அடி அளவுள்ளது சடலம் மேல்பார்த்த நிலையில் நிலத்தில் கிடந்தது. நான் சென்றபொழுது அந்தக் கூண்டில் விளக்குகள் ஒன்றும் எரியவில்லை. அங்கு தென்பட்ட வெளிச்சம் அறைக்குள் வெளியில் இருந்து கிடைத்தது. அந்த மங்கலான வெளிச்சம் இச்சடலத்தில் சேட்டும் சாரமும் அணியப்பட்டிருந்தது.

நான் இரத்தக் கறையைக் காணவில்லை. அத்துடன் வெட்டுக்காயங்களையோ குத்துக் காயங்களையோ போன்றஇரத்தக்காயங்களையோ காணவில்லை.

இறந்தவர் கருப்பு நிறமாகக் காணப்பட்டார். அவ்விடத்தில் நான் நுணுக்கமாகச் சடலத்தை அவதானிப்பதற்கு வேண்டிய வெளிச்சம் இருக்கவில்லை. அத்துடன் கூண்டு சிறிதாகவும் நெருக்கமாகவும் இருந்தது.

நான் சடலத்தை வைத்தியசாலை பிரேத அறைக்கு எடுத்துச் செல்வது உசிதமெனக்கருதினேன். அதன் பிரகாரம் நான் யாழ் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும்படி கட்டளையிட்டேன். அத்துடன் நான் யாழ் சட்ட வைத்திய அதிகாரியைப் பிரேத பரிசோதனை செய்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி கட்டளையிட்டேன்.

நீதிபதி மரணவிசாரணையை முடித்துக்கொண்டு இம்மாதம் 31ம் திகதி தீர்ப்பு வழங்குவதற்கு ஒத்திவைத்தார்.

(மா-அ)

---

உடுப்பிட்டி ப.நோ.கூ.ச.

## புதிய நெறியாளர்

(கரவெட்டி)

உடுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க புதிய நெறியாளர் சபைக்குப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்! திரு. ஆ. க. மாணிக்கம் உப-தலைவர்! திரு வ. சின்னத்தம்பி, ஏனைய உறுப்பினர்கள்! ஆ. இ. குணசிங்கராசா, செ. குணசிங்கம், சோ துரைசிங்கம், க குணரத்தினம், இ. மயில்வாகனம்.

---

## ஐ. தே. கட்சி நாவாந்துறை வேட்பாளர் வாபஸ்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாநகரசபைத் தேர்தல் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் பட்டியலில் 23வது இடத்தைப் பெற்றுள்ள ஆசிரியரான நாவாந்துறை கோவில் லேனைச் சேர்ந்த திரு நீ. ஜெகஸ்ரன்ரைன் தாம் தேர்தலில் இருந்து விலகிக்கொள்வதாக அறிவித்துள்ளார்.

---


ராஜா (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர் - சாவித்திரி
வேட்டைக்காரன்

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
திக்சமாறிய பறவைகள்

லிடோ (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
மன்னவன் வந்தானடி

வெஸ்லி (சாவகச்சேரி)
தினசரி- 4-15 7-00
சனி. ஞாயிறு 1-30
லவகுசா

ஹரன் (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
எஸ்.எஸ் ஆர்-விஜயகுமாரி
சாரதா
இதுவே யாழ்நகரில் கடைசித்தடவை

றீகல் 5-வது வாரம்
(யாழ். நகர்) தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
சிவாஜி, பிரபு, சுந்தரராஜன், ஸ்ரீப்பிரியா
சங்கிலி
சிலதினங்கள் மட்டும் (ஈஸ்ட்மன் கலர்)

ராணி தினசரி 10-30, 2-00, 6-00, 9-30
(யாழ். நகர்)
14-5-83 வரை
கமலஹாசன் ராஜபார்வை
15—19-5-83 உல்லாசப் பறவைகள்
வெகு விரைவில் சகலகலா வல்லவன்

ஸ்ரீதர் தினசரி 10.30, 2.00, 4.30, 7.00 9.30
(யாழ். நகர்)
Walt Disney's
HERBIE GOES BANANAS
(Family Entertainment)

வின்ஸர் தினசரி இன்னும் சில தினங்கள் மட்டும்
(யாழ். நகர்) 10-30, 2-30, 6-30, 9-30
வெகுமார்-சரிதா- சில்க் சுமிதா-சுருளிராஜன்
வண்டிச்சக்கரம்
(வண்ணக் கலர்)
18-5-83 முதல் SO FINE

மனோகரா தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
கமலஹாசன், ஜெய்சங்கர், ஸ்ரீதேவி
வாழ்வே மாயம் (ஈஸ்ட்மன் கலர்)

சாந்தி (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
ஹவுஸ் புல்! ஹவுஸ் புல்!!
-- வெள்ளிவிழா வண்ணச்சித்திரம் --
கதையால் நடிப்பால் பாடல்களால்
சிறப்பு நிறைந்த சித்திரம்
சிவாஜி லட்சுமி நாகேஷ் மனோரமா
பாலாஜியின்
தியாகம்
(ஈஸ்ட்மென் கலர்)
இளையராஜா விஜயன்

தேவை
SPRAY PAINTERS
ஸ்பிறே பெயின்ரிங் வேலை நன்றாகச் செய்யக்கூடியவர்கள் தேவை பகுதி நேரம் அல்லது முழுநேரம்) உடனே விண்ணப்பிக்கவும்,
விளம்பர இல. 7240
மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம்
7240

JASE INSTITUTES
TRIMMER HALL
21/6, வேம்படி றோட் யாழ்ப்பாணம்
கடந்தகாலப் பரீட்சையில் அதிகமாணவர்கள் சித்தியடைந்ததும், 5 வருடமாக தொடர்ந்து நடைபெறுவதுமான ஒரே நிறுவனம்
● C E I. Part I 1984 மே பரீட்சைக்கு [LONDON ENGINEERING COURSE] க பொ த. (உயர்தரம் 2 பாடங்களுடன்
● DIPLOMA IN DRAUGHTSMAN SHIP COURSE
க. பொ. த (சாதாரணம்) 6 பாடங்களுடன் ஆரம்பமாகியுள்ளன சனி, ஞாயிறு கிழமைகளில் தொடர்புகொள்க.
நடைபெறும் ஏனைய வகுப்புக்கள்:
CITY AND GUILDS, B A, G. A. Q.
விபரங்களுக்கு!
நிர்வாகி 7228

லெனினிஸ சமாதானக் கொள்கை
லெனின் தலைமையில் சோவியத் ஆட்சி 1917-ல் நிறைவேற்றிய முதல் ஆணை சமாதானத்தின்மீதான ஆணையாகும். எல்லா நாடுகளுக்கும் அது சமாதானத்தை வழங்கியதோடு முதலாவது உலக யுத்தத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சகலநாடுகளது மக்களுக்கும் அரசாங்கங்களுக்கும் உடனடியாக விரோதங்களை விடுத்து உலக சமாதானத்தை நிலைநாட்டுதற்குப் பேச்சுவார்த்தைகளைத் தொடங்குமாறு விண்ணப்பித்தது.
இந்த லெனினிஸ சமாதானக் கொள்கையை இன்று வரை சோவியத் யூனியன் உறுதியாகப் பின்பற்றுகிறது.
சமாதானத்தை வலுவுறச் செய்வதற்கும், ஆயுதப் போட்டிக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கும், உலக சமாதானத்துக்குச் சோவியத் யூனியனைப்போல் வேறெந்த நாடும் இவ்வளவு பாடுபட்டதில்லை.
சோவியத் சமாதான முயற்சிகளைப் பற்றி அறிய, இலங்கை சமாதானக் கவுன்ஸிலின் பழம்பெரும் உழைப்பாளியும், உலக சமாதானக் கவுன்ஸிலின் உறுப்பினருமான தோழர் க துரைசிங்கம் எழுதிய ''லெனினும் ஆசியாவும்'' என்ற நூலைப் படியுங்கள்.
இந்நூல் புத்தகசாலைகளில் கிடைக்கும்.
விலை ரூபா 10/-
சோஷலிஸ ஆய்வுக் கழகம்,
31, வில்சன் வீதி, கொழும்பு-12.
7234

# "தமிழர் பிரச்னைகளை தென்னிலங்கை மக்கள் நன்கு உணர்கின்றனர்!"

## பருத்தித்துறையில் வாசுதேவ நாணயக்கார

(புலோலி)

"அடக்கு முறையினால் ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைத்துள்ள இந்த ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்திற்கு வடபகுதி மக்கள் தொடர்ந்தும் எதிர்ப்பைக் காட்டி வருவதனால் தென்பகுதி மக்கள் வடபகுதி மக்களுக்கு தலைவணங்கி வீரவணக்கம் செய்கின்றார்கள். தமிழ் மக்கள் தமிழ் தேசிய இனத்தின் பிரச்னைகள் உரிமைகளுக்காகவே போராடுகின்றார்கள் என்பதை தென்பகுதி மக்கள் நன்குணர்ந்துள்ளனர்."

இவ்வாறு நவசமசமாஜக் கட்சித் தலைவர் திரு. வாசுதேவ நாணயக்கார பருத்தித்துறை கடற்கரை மைதானத்தில் நடைபெற்ற உள்ளூராட்சிமன்ற தேர்தல் பிரசாரத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார். சட்டத்தரணி எம். சிவகுருநாதன் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். தொடர்ந்து உரையாற்றிய திரு வாசுதேவ நாணயக்கார குறிப்பிட்டதாவது,

நவசமசமாஜக்கட்சிபாராளுமன்ற ஆசனங்களையும் உள்ளூராட்சிமன்ற நிர்வாகங்களையும் கைப்பற்றுவதற்காகத் தேர்தலில் ஈடுபடவில்லை. எதேச்சாதிகாரப் போக்கில் சென்று கொண்டிருக்கையில் இந்த அரசாங்கத்திற்கு அடிமட்டத்திலிருந்து எதிர்ப்புச் சக்தியை ஏற்படுத்தவேண்டும்.

நாட்டின் தேசிய விடுதலைப் போராட்டம், சுதந்திரப் போராட்டம், வர்க்கப் போராட்டம் என்பனவற்றை ஒன்றிணைத்து தேசிய இனவர்க்கப்பிரச்னைகளை ஒன்றாக எடுத்துச் செல்வதே நவசமாஜக்கட்சியின் நோக்கமாகும்.

இன்றைய அரசாங்கம் மிக நெருக்கடியான பொருளாதாரச்சிக்கலில் அமிழ்ந்து தவித்து கொண்டிருக்கிறது மக்களைப் பிழிந்துதான் அரசின் ஆட்சி நடைபெறுகின்றது. எதிர்வரும் காலங்களில் பொருளாதாரம் சீரழிந்து நாட்டின் அபிவிருத்திதடைபடும் இதனால் தமிழ்மக்களே அதிகம் பாதிப்படைவார்கள். இந்த அரசின் வர்த்தகக் கொள்கையினால் வடபகுதி விவசாயிகள் பெரும்பாதிப்படைந்து வருகின்றனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் அரசாங்கத்துடன் உடன்படிக்கைகளையும், பேச்சுவார்த்தைகளையும் மட்டுமே நடத்தினார்கள். இவர்கள் உடன்படிக்கைகளை, பேச்சுவார்த்தைகளையும் நடாத்துவதிலேயே காலத்தைக் கழிப்பார்கள் சர்வாதிகாரப்போக்கில் செல்லும் இவ் அரசை எதிர்த்து தமிழர் விடுதலைக் கூட்டணியினர் என்னசெய்தார்கள்!

கட்சியின் பொதுச் செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்தன உரையாற்றுகையில் ஊழ்ந்த அரசின் எதேச்சாதிகாரப்போக்கினால் ஜனநாயகத்திற்குப் பேராபத்து ஏற்பட்டுள்ளது. மக்களை ஏமாற்றுவதற்காக சர்வசன வாக்கெடுப்பை நடாத்திய அரசாங்கம் இப்புரட்டினை நீக்கி பொதுத்தேர்தலை நடாத்தவேண்டுமென எமது கட்சி கோருகின்றது என்றார்.

நவசமசமாஜக் கட்சி வடபிராந்திய அமைப்பாளர் திரு ஏ கே அண்ணாமலை, திரு. ரி. எம் ஜனகன், பருத்தித்துறை நவசமசமாஜக்கட்சி முதலாவது வேட்பாளர் திரு. எஸ். முருகேசு, டாக்டர் மாசிலாமணி ஆகியோரும் உரையாற்றினர்.

---

இரணைதீவில் சம்பவம்:

# மீன் வாடியில் தீ!

## ரூபா 2 லட்சம் நஷ்டம்!!

(கிளிநொச்சி)

மீன்வாடிகள் திடீரெனத் தீப்பிடித்துக்கொண்டதால் மீன்பிடியந்திரங்கள், கருவாடு, உணவுப்பண்டம் ஆகியனவும் எரிந்து சாம்பராகின. இதனால் மீனவர்களுக்கு சுமார் இரண்டு லட்சம் ரூபாவிற்கு மேல் நஷ்டம் ஏற்பட்டுள்ளது

இச்சம்பவம் இரணைதீவில் உள்ள சின்னத்தீவு கடல் பிராந்தியத்தில் நடைபெற்றுள்ளது சம்பவதினம் ஆறுமுகம் சின்னத்தம்பியின் மீன் வாடிவீடுகளும் எஸ். சின்னத்தம்பி என்பவரது வாடி வீடுகளும் வேறு சிலரது வாடிவீடுகளும் திடீரென தீக்கிரையாகின இதனால் இம் மீனவர்களிற்கு இரண்டு லட்சம் ரூபாவிற்கு மேல் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக பொலிசில் புகார் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஈ. டபிள்யு. எக்கநாயக்கா புலன்விசாரணை மேற்கொண்டுள்ளார்.

---

## ஐ. தே. க.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யில்லாமல் ஒரு மாநகரத்தை முன்னேற்ற முடியாது கடந்த 4 வருட ஆட்சியில் மத்திய அரசின் ஆதரவு இல்லாததினால் தான் யாழ். நகரில் அபிவிருத்தி வேலைகள் நடைபெறவில்லை

"ஆல்பிரட் துரையப்பா முதல்வராக இருந்தபோது நடந்த அபிவிருத்தி வேலைகள் இன்று மக்களுக்கு உதவுகிறது அமரர் ஜி ஜி பொன்னம்பலம், ஐ தே க. அரசை ஆதரித்த படியால் தான் வடக்கில் பல அபிவிருத்தித்திட்டங்கள் நடைபெற்றன குமார் பொன்னம்பலம் தனிப்பட்ட முறையில் தமிழ்காங்கிரஸை வைத்து நடத்துவதனால் தான் தேர்தலில் பின்வாங்குவதாக அறிக்கை விட்டார்.

50 வருடத்திற்கு முந்திய மின்சாரக்கம்பிகள் தான் இப்போதும் பாவனையில் இருக்கிறது இதைத்திருத்த பல கோடி பணம் தேவை. மத்திய அரசிலும் மாநகரசபையிலும், ஒரே கட்சி இருந்தால் தான் இப்பண உதவியைப் பெறமுடியும். தீயணைக்கும் படை ஒன்று அவசியம் தேவை. இதற்கு மத்திய அரசின் ஒத்துழைப்பில்லாமல் செய்யமுடியாது

அபிவிருத்தி ஒன்றை கருத்தில் கொண்டே போட்டியிடுகின்றோம்

"அப்பாவி மக்கள் மீதுஇராணுவ தாக்குதல் நடத்துவது குறித்து ஜனாதிபதியுடன் கதைத்தபோது நடவடிக்கை எடுப்பதாகக் கூறியுள்ளார்" என்றார்.

ஜிறனவே வாபஸ்பெற்ற ஐ தே க. வேட்பாளர்கள் சிலர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டதுடன் வாபஸ் கடிதங்களை திருப்பப் பெற்று இத் தேர்தலில் போட்டியிடுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (மா)

---

## மேலும் இருவர் வாபஸ்!

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபைத் தேர்தலில் போட்டியிடும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மேலும் இரு வேட்பாளர்கள் தேர்தலிலிருந்து விலகிக் கொள்வதாக அறிவித்துள்ளனர்.

திரு சங்கரப்பிள்ளை இராசரத்தினம், திரு. கே. சண்முகநாதன் ஆகிய இருவரும் பத்திரிகைக்கு விடுத்துள்ள அறிக்கை இளைஞர்களின் கோரிக்கைக்கு மதிப்பளித்து தேர்தலிலிருந்து விலகிக் கொள்வதாகத் தெரிவித்துள்ளனர்.

---

## இன்றைய பலன்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கடும் சிந்தனையை ஒருவழிப்படுத்திச் செயலாற்றவும் சுமாரான தினம்.

தனு: பொருள் விட்டுத் தொழில் செய்வதை இன்று தவிர்த்துக் கொள்ளவும் மன அமைதி குன்றும் எதிரிகள் எக்காளமிடுவர் மறைந்த நினைவு மீண்டும் தலைதூக்கும்.

மகரம்: பெரிய இடத்துத் தொடர்பு இன்று பெரும் இடத்திற்கு அழைத்துச் செல்லும் புதுமனை கட்டுவதற்கு சிலர் ஆலோசனை செய்வார்கள் விருந்தினர் வருகை மகிழ்ச்சிதரும்.

கும்பம்: நீண்டநாள் எதிர்பார்த்த நல்ல செய்தி இன்று கிடைக்கலாம் வணிகர்களுக்கு வியாபார விருத்தியுண்டு முதலீடு செய்வதில் இன்று நல்ல திருப்பம் ஏற்படும்.

மீனம்: புதுமையான சம்பவங்கள் இடம்பெறும் அன்னை வழி ஆதரவு தாராளமாகக் கிடைக்கும் இரக்க சிந்தை மேலிடும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

---

மற்றொரு பெண்ணுக்கு

# கணவன் ஜீவனாம்சம் கட்டுவதை விரும்பாத மனைவி தற்கொலை!

(கிளிநொச்சி)

கணவன் மற்றொரு பெண்ணுக்கு ஜீவனாம்சப் பணம் கட்டுவதை விரும்பாத 42 வயது மனைவியொருவர் மனவருத்தம் தாங்காது நஞ்சுத்திரவகம் அருந்தி மரணத்தை தழுவிக்கொண்டார்.

முரசுமோட்டையைச் சேர்ந்த கமலாம்பிகை திருநாவுக்கரசு என்பவரே நஞ்சிட்டும் நஞ்சமடைந்து மரணத்தை தழுவிக்கொண்டார். இம்மரணம் சம்பந்தமான விசாரணையை கிளிநொச்சிப் பகுதி மரண விசாரணை அதிகாரி முருகேசு யோகலிங்கம் மேற்கொண்டார். சாட்சிகளை கிளிநொச்சி பொலிஸைச் சேர்ந்த ஜனாப் ஏ. ரி பரீத் ஆஜர் செய்தார். சடல பரிசோதனையை கிளிநொச்சி மாவட்ட வைத்திய அதிகாரி பி. நவரெத்தினராசா மேற்கொண்டார்.

மரணமானவரின் கணவர் திருநாவுக்கரசு வேறு ஒரு பெண்ணையும் திருமணம் செய்து பின் அப்பெண்ணை விட்டுவிட்டு ஜீவனாம்சம் கட்டி வருவதாகவும் இதை விரும்பாத மரணமான கமலாம்பிகை படிக்காசை கட்டவேண்டாம் என வற்புறுத்தி வந்ததாகவும் கணவன் மனைவியின் சொல்லை கேட்காது இருக்கவே மனமுடைந்தமனைவி ஒருவருக்கும் தெரியாது கிருமிநாசி அருந்தி மரணத்தை தழுவியதாகவும் மரண விசாரணையில் அளித்த சாட்சியங்களில் தெரியவந்தது.

மரணமானவரின் கணவர் அப்பலவாணர் திருநாவுக்கரசுவும் சாட்சியமளித்ததைத் தொடர்ந்து தற்கொலை மரணம் என மரணவிசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்.

---

# பேராதனை சம்பவம்

## ஈழ மாணவர் மன்றம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் தமிழ் மாணவர்கள் தாக்குதலுக்குள்ளானதைக் கண்டித்து ஈழ மாணவர் பொதுமன்ற நிர்வாகச் செயலாளர் திரு. மு. டேவிட்சன் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

"பேராதனைப் பல்கலைக் கழகத்தில் கல்வி பயிலும் தமிழ்பேசும் மாணவர்கள் தமது அரசியல் கருத்துக்களை வெளியிட்டமைக்காக கடுமையான தாக்குதலுக்குள்ளாகியுள்ளனர்

"சில இனவாத அரசியல் கட்சிகளினால் வழிநடத்தப்படும் மாணவர்களே இத் தாக்குதலில் சம்பந்தப்பட்டதாக அறிகின்றோம்.

"சிறிலங்கா அரசுக்கெதிரான ஈழ மக்களின் விடுதலைப் போராட்டத்தை சிங்கள மக்கள் புரிந்துவரும் இவ்வேளையில் பேராதனைப் பல்கலைக்கழக புத்திஜீவிகள் சிலரின் இந் நடத்தைகள் கண்டிக்கப்படவேண்டியதொன்றாகும். அதேவேளையில் சில முற்போக்கு சிங்கள மாணவர்கள் இத் தாக்குதலிருந்து தமிழ் பேசும் மாணவர்களை பாதுகாத்தமை பாராட்டப்பட வேண்டிய தொன்றாகும்.

"மேலும், ஈழம் விடுதலை அடைவதன் மூலமே ஸ்ரீலங்கா மக்கள் பூரணவிடுதலை அடைய முடியும் என்பதையும் இச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்" (மா)

---

## கிரிக்கட்

(யாழ்ப்பாணம்)

யாழ் தபால் அலுவலக ஊழியர்களுக்கும் அஞ்சல் தொலைத் தொடர்பு அலுவலக ஊழியர்களுக்கு மிடையில் ஒரு கிரிக்கெட் போட்டி நாளை ஞாயிறு காலை யாழ் தபால் நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

ஜனவுஸ் வெற்றிக்கேடயத்திற்கான இந்த 6வது வருட கிரிக்கட் போட்டிக்கு தபால் பகுதியில் திரு. ஏ. கிறிஸ்ரி ராஜாவும், தொலை தொடர்புப்பகுதியில் திரு க. தாகராஜாவும் தலைமை வகிப்பர். (அ)

---

## வீரவாகு அறிக்கை

(புலோலி)

பருத்தித்துறை நகரசபைத் தேர்தலிலிருந்து தமது சுயேச்சைக்குழு விலகுவதாகத் தெரிவித்து சுயேச்சைக்குழுவின் முதல் வேட்பாளரும் சுயேச்சைக்குழுத் தலைவருமான திரு. பொ. வீரவாகு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். அறிக்கை விபரம் வருமாறு:

"இன்று ஏற்பட்டுள்ள புதிய அரசியல் சூழ்நிலையில் விடுதலைப் போராளிகளான இளைஞர்களின் இலட்சியத்தை அறிந்து அவர்களின் உணர்ச்சிகரமான வேண்டுகோளுக்குத் தலைவணங்கி, மதிப்பளித்து, நகர சபைத் தேர்தலில் இருந்து விலகிக்கொள்கிறோம்."

---

## அளவெட்டியில் சீர்காழி நிகழ்ச்சி

(பண்டத்தரிப்பு)

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் ஆலயத்தில் 23-ம் திகதி திங்கட்கிழமை சீர்காழி கோவிந்தராஜனின் இசை நிகழ்ச்சி நடைபெறவுள்ளது சீர்காழி கோவிந்தராஜனின் மகனும் இவருடன் சேர்ந்து பாடுவார்.

---

இளைஞர்களுக்கு பூரண ஆதரவு

# வவனியா நகரசபை தேர்தல்: சுதந்திரகட்சி பகிஷ்கரிப்பு!

(வவுனியா)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வவுனியா மத்தியகிளை அண்மையில் கூடியபொழுது வவுனியா நகரசபைத்தேர்தலை முற்றாக பகிஷ்கரிப்பதெனவும் இத்தேர்தலில் கட்சி உறுப்பினர்கள் எவராவது எந்தக் கட்சிக்காவது வாக்களிக்கக் கூடாது என்றும், தேர்தலை முற்றாக பகிஷ்கரிக்கவேண்டுமெனவும் தீர்மானித்துள்ளது.

பகிஷ்கரிப்பின் ஒரு அம்சமாக தேர்தல் நிலையத்துக்கு சென்று வாக்குச் சீட்டைப் பெற்று வாக்குச்சீட்டை செல்லுபடியற்றதாக செய்ய வேண்டுமெனவும் தீர்மானித்துள்ளது.

"வவுனியா நகர சபைத் தேர்தலில் போட்டியிடும் கட்சிகளால் சாமானிய மக்களுக்கு எதையும் சாதிக்கமுடியாது என்பதை எமது வவுனியாக் கிளை பூரணமாக நம்புகின்றது. தமிழ் இளைஞர்களுடைய உணர்ச்சிகளுக்கும், அபிலாஷைகளுக்கும் எம்மைப்பொறுத்தமட்டில் பூரண ஆதரவு கொடுக்க நாம் தயாராக உள்ளோம்" என்றுகட்சிதீர்மானம் வெளியிட்டுள்ளது.

வன்னிமாவட்ட சிறிலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர் திரு மு நடராசா இல்லத்தில் அவரது தலைமையில் மத்திய கிளை கூட்டம் நடைபெற்றது.

---

## தீக்கிரை...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

கிடுகுகளினால் அமைக்கப்பட்டிருந்த மலசலகூடங்கள் நேற்று மாலை இனந்தெரியாதவர்களால் தீவைத்துக் கொளுத்தப்பட்டது

---

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983-ம் ஆண்டு மே மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Poat Office Sri Lanka. under nnmber B 100236/81. Eelanadu-P O. Box: 49, Telcgram: Eelanadu, Telephone: 22389 — 24126.